International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 06 Issue: 03 July to September 2024 www.irjtsjournal.org

# அரசியலுக்கு மாறான குற்றங்களும் தண்டனைகளும் (சிலப்பதிகாரம்)

**திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி,**
**உதவிப்பேராசிரியர்,**
**முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,**
**திஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர்கல்லூரி,**
**சிவகாசி.**

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டையகாலம் முதல் இன்றுவரை அரசியலுக்கு மாறான குற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றது. சிலப்பதிகாரத்தில் அரசனது பொருள் கவர்தல், உறு பொருள் கவர்தல், அறை போதல் என்ற அரசியலுக்கு மாறான குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உறுபொருள் கவர்தலுக்கு சிறைத்தண்டனையையும், பிற இரு குற்றங்களுக்கும் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை சிலப்பதிகாரம் வாயிலாக அறிய முடிகின்றது. இவ்ஆய்வுக்கட்டுரை, சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள அரசிலுக்குமாறான குற்றங்கள் குறித்தும், அதற்கு மன்னனும், பிற அமைப்பும் அளித்த தண்டனை குறித்தும் விளக்குவதாக அமைகின்றது.

**KEYWORDS**

சிலப்பதிகாரம், அரசனதுபொருள்கவர்தல், உறுபொருள்கவர்தல், அறைபோதல், கொலைத்தண்டனை, சிறைத்தண்டனை

**முன்னுரை**

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். ஐம்பெருங்காப்பியங்களில் இது முதன்மையாக போற்றப் படுகிறது. இதனை இயற்றியவர் இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் சமணசமயத்தைச் சார்ந்ததாகும். சிலப்பதிகாரத்தில் நிகழ்ந்த குற்றங்களை ஞா.தேவ நேயன் பழந்தமிழாட்சி எனும் தனது நூலில் குறிப்பிட்டுள்ள அரசியலுக்கு மாறான குற்றங்களுடன் ஒப்பிட்டு ஆய்வதாகவும், அவ்அரசியலுக்குமாறான குற்றங்களுக்கு சிலப்பதிகாரத்தில் எவ்வகைத்தண்டனை அளித்துள்ளனர் என்பதையும் ஆராய்வதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**அரசியலுக்குமாறான குற்றங்கள்**

அரசியலுக்குமாறான குற்றங்கள் என்பவை “இறையிறுக்காமை, உறுபொருள்கவர்தல், பகையொற்று, அறைபோதல், அரசனது பொருள்கவர்தல், அரசனது இன்பப்பொருள் நுகர்தல், ஊருக்கு அல்லது நாட்டிற்கு இரண்டகஞ்செய்தல், அரசற்கிரண்டகஞ்செய்தல், அரசானைமீறல்,


© 2024, IRJTSR

கொள்ளையடித்தல், கலகஞ்செய்தல்"[1] என ஞா.தேவநேயன் பழந்தமிழாட்சி எனும் நூலில்விளக்கம் தருகின்றார்.

**அரசியலுக்குமாறான குற்றத்திற்கு அளிக்கப்பட்ட தண்டனை**

மேலே குறிப்பிட்ட மூன்றுவகைக் குற்றம் புரிந்தவர்களுக்கும் பொதுவானதண்டனையாக குடை வோலையிடப் பெறாமை (வாக்களித்தல் உரிமை கிடையாது) இருந்தது. அரசியலுக்குமாறான குற்றங்களுக்கு "இறையிறுக்காமைக்குச் சொத்துப் பறிமுதலும், உறுபொருள் கவர்தலுக்குச் சிறையும், பிறவற்றிற்குக் கொலையும்"[2] தண்டனையாக வழங்கப்பட்டது என ஞா. தேவநேயன் பழந்தமிழாட்சி எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

**உறு பொருள்கவர்தல்**

உறு பொருள் என்பது உடையார் இன்மையின்தாமே வந்துற்ற பொருள். "வைத்தார் இறந்து போக நெடுங்காலம் நிலத்தின் கண்கிடந்து பின்கண்டெடுத்ததூஉம், தயத்தார் பெறாததூஉமாம்"[3] என்று பரிமேலழகர் பொருள் தருகிறார். இங்கு உறு பொருள் என்பது புதையலைக் குறிப்பதை அறிய முடிகின்றது. உறு பொருள் கவர்தல் என்பது அரசியலுக்கு மாறான குற்றமாகும். அதற்கு சிறைத்தண்டனை வழங்கியதை சிலப்பதிகாரத்தின் வழி அறிய முடிகின்றது.

சோழநாட்டில் பராசுரன் என்னும் பார்ப்பனன் வாழ்ந்து வந்தான். அவன் தன்னுடைய புலமையைக்காட்டி, உதியஞ்சேரலாதனின் அவையில் உள்ள பார்ப்பனமேதைகளோடு சொற்போரிட்டுப்பார்ப்பன வாகை சூடினான். உதியஞ் சேரலாதன் அவனுக்கு பெரும் பொருளையுடைய பரிசிலை வழங்கினான். அதனைவாங்கிக் கொண்டு வரும்வழியில் பாண்டிய நாட்டில் திருத்தங்கல் என்ற ஊரில் உள்ள மன்றின் அருகிலிருந்து அரசமரநிழலில் அமர்ந்து இளைப்பறினான். அப்பொழுது அவனை அவ்வூர்ச்சிறுவர்கள் சூழ்ந்திருந்தனர். அவன் அவர்களிடம், 'எனக்கு இணையாக வேதம் ஓது பவர்களுக்கு இச்சிறு பொதியைக் கொடுப்பேன'; என்று கூறினான். அதைக் கேட்டுவார்த்திகன் மகன் தட்சிணாமூர்த்தி மறையொலி சிறிதும் வழுவாமல் வேகம் ஓதினான். அதனைக்கண்டு மகிழ்ந்த பராசுரன் அவனிடம் பரிசுப்பொதியைக் கொடுத்து விட்டு சென்றான். தட்சிணாமூர்த்தியின் வீட்டார் இவ்வணிகலன்களை அணிந்து மகிழ்ந்தனர்.

இதனைக் கண்ட அரசுப்பணியாளர்கள் சிலர் அரசியல் முறைமைக்குமாறாக இப்பார்ப்பான் அரசுக்கு சேர வேண்டிய புதையல் பொருளைக் கவர்ந்து கொண்டான் என்று குற்றம் சுமத்திச்சிறையிலடைத்தனர். இதனால் அவனின் மனைவி கார்த்திகைமனம் வருந்தினாள். இதனைக்கண்ட கொற்றவை தெய்வம் தன்னுடைய கோயிலின் கதவை மூடிக் கொண்டது. இதனை அறிந்த மன்னன் மனம் வருந்தி ஏவலர்களிடம், 'என் ஆட்சியில் கொடுங்கோன்மை ஏதாவது நிகழ்ந்ததா? கொற்றவைக்கு ஏற்பட்ட வருத்தம் என்ன? என்பதை ஆராய்ந்து கூறுங்கள்' என்று கட்டளையிட்டான். அப்பொழுது ஏவலர்கள் வார்த்திகனை சிறையிலிருந்து விடுத்து மன்னன் முன் நிறுத்தினர். வார்த்திகனின் காலில்விழுந்து மன்னன் மன்னிப்பு கேட்டான். இது என்தவறல்ல என்னுடைய கடமைதவறிய அறிவில்லாதகாவலர்களின் தவறு என்று கூறி அவனை சிறையிலிருந்து


© 2024, IRJTSR

விடுத்தான். அவனுக்கு திருத்தங்கல் என்ற ஊருடன் குறைவு படாதவிளை வினை உடையவயலூர் என்ற ஊரினையும் இறையிலியாக வழங்கினான் என்பதனை,

“கோத்தொழில் இளையவர் கோமுறை அன்றி
படுபொருள் வெளவியபார்ப்பான் இவன்என
இடுசிறைக் கோட்டத்து இட்டனராக
வார்த்திகன் மனைவிகார்த்திகை என்போள்
அலந்தனள்ஏங்கி அழுதனள் நிலத்தில்
புலந்தனள் புரண்டனள் பொங்கினள் அதுகண்டு
மையறுசிறப்பின்ஐயைகோயில்
செய்வினைக்கதவம் திறவாதாகலின்”

(சிலம்பு.கா.23 : 101-108)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. பாண்டியன் நெடுஞ்செழியன் இந்நிகழ்விற்குப் பிறகு, பார்ப்பனருக்கு மட்டு மன்றி அனைவருக்கும் புதையலின் மீது சம உரிமையை ஏற்படுத்தியதை,

“இடு பொருளாயினும் படு பொருளாயினும்
உற்றவர்க் குறுதி பெற்றவர்க்காமென
யானை எருத்தத் தணிமுரசிரீ இக்
கோன்முறையறைந்த கொற்ற வேந்தன்”

(சிலம்பு.கா.23 : 128-131)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இதனை “பிறர் கொடுத்த பொருள் எனில் அது பெற்றவருக்கும், புதையல் எனில் அது எடுத்தவருக்கும் சொந்தமாகும் என்றுயானைப்பிடரியிலே அழகிய முரசினை ஏற்றி அரச ஆணையாகப்பறை அறிவித்தான்.”[4] என்ற கருத்தும் அரண் செய்கிறது.

உறுபொருளாகிய புதையல் அரசுக்கு சேர வேண்டியது. அதை எடுப்பவர்களுக்கு சிறைத்தண்டனை அளிக்கப்படும் என்பதனை இதன் வாயிலாக அறிய முடிகின்றது.

**அறைபோதல்**

அறைபோதல் என்பதற்கு வஞ்சகத்துடன் செயல் படல் என்பது பொருளாகும். ஓர் அமைச்சன்தன்னுடைய அரசனுக்குவஞ்சகம் செய்தால் அவனுக்கு தண்டனை வழங்கப் பட்டுள்ளது. அரசனின் ஆட்சி செம்மையுறுவதற்கு அமைச்சர், புரோகிதர், தூதர், ஒற்றர், படைத்தலைவர் போன்றோர் தக்கதுணையாக இருந்துள்ளனர். இவர்களைக் கொண்டதே ஐம் பெருங்குழுவாகும்.


© 2024, IRJTSR

இக்குழுவில் இடம் பெறும் ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளை உணர்ந்து செவ்வனே செயலாற்றியுள்ளனர்.

சிலப்பதிகாரத்தில் தெய்வமன்றங்களான ஐவகை மன்றங்களைக் குறிப்பிடும் போது சதுக்கப் பூதமும் குறிப்பிடப்படுகிறது. இச்சதுக்கப்பூதம் அரசனுக்குவஞ்சகம் செய்யும் அமைச்சர்களைக் கொன்றுதின்னும் என்பதன் மூலம் துரோகம் செய்யும் அமைச்சர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதை அறிய முடிகின்றது. இதனை,

“அறைபோகு அமைச்சர்………..

கைக்கொள் பாசத்துக் கைப்படு வோர் என

காதம் நான்கும் கடுங்குரல் எழுப்பிப்

பூதம்புடைத்து உணும் பூதசதுக்கமும்”

(சிலம்பு.கா.5 : 130, 132-134)

என்ற அடிகள் விளக்குகின்றன.

**அரசனது பொருள்கவர்தல்**

அரசனது பொருளைக்கவர் பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டமையை செவ்விலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்திலும், அரசியின் சிலம்பினைக்கோவலன் திருடினான் எனக் கருதிய பாண்டிய மன்னன் ஆராயாமல் அவனுக்கு மரணதண்டனை வழங்கினான். அவன் சிலம்பிற்காக மரணதண்டனைவழங்கினான் என்பதன் வழி அன்று அரச பொருள்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பினை அறிய முடிகின்றது. அரசப்பொருள் அல்லாமல் பிற பொருளாக இருந்திருந்தால் மன்னன் விசாரணை செய்து தண்டனை வழங்கியிருக்கலாம். அவனைமதி மயங்கச்செய்தது அரசப்பொருள் என்பது காரணமாக இருக்கவாய்ப்பு உள்ளது. அரசப்பொருளைத்திருடியவனைக் கொல்வது தவறு அல்ல என்று கண்ணகியிடம் பாண்டியமன்னன் கூறுகின்றான். இதனை,

“தாழ் பூங்கோதை தன் கால் சிலம்பு

கன்றிய கள்வன் கையது ஆகின்

கொன்று அச்சிலம்பு கொணர்க…”

(சிலம்பு.கா.16 : 151-153)

என்ற பாடலடிகளும்,

“கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று”

(சிலம்பு.கா.20 : 64)

என்ற பாடலடியும் விளக்குகின்றன.

இக்குற்றத்திற்கு அரசன் ஆராயாமல் தீர்ப்பு வழங்கியுள்ளான். அதனால், பாண்டிய மன்னன் வழங்கியதவறான தீர்ப்பால் அவனது செங்கோல் வளைந்தது. பின், அவன் தன்னுயிரை விடுத்து அதனை மீண்டும் நேராக நிற்கச் செய்தான். இதன் மூலம் அரசர்கள் அரசப்பொருளின் முதன்மையைக் கருத்தில் கொண்டு அதனைக்கவர்தல் என்ற குற்றத்திற்குத் தண்டனையை ஆராயாமல் உடனே நிறைவேற்றியுள்ளமையை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சிலப்பதிகாரத்தில் அரசியலுக்குமாறான குற்றங்களான உறுபொருள்கவர்தல், அறைபோதல், அரசனது பொருள்கவர்தல் இடம் பெற்றுள்ளது. உறுபொருள்கவர்தலுக்கு சிறைத் தண்டனையும், அறைபோதல், அரசனது பொருள்கவர்தல் ஆகிய இருகுற்றங்களுக்கு கொலைத்தண்டனையும் விதிக்கப்பட்டதை சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. அரசனது பொருள்கவர்தல் என்ற குற்றத்திற்கு மன்னன் எந்த வொருவிசாரணையு மின்றி தீர்ப்பு வழங்கியதையும், அறைபோதல் என்ற குற்றத்திற்கு ஐவகைத் தெய்வ நீதி மன்றங்களில் ஒன்றான சதுக்கப்பூத மன்றத்தில் உள்ள சதுக்கப்பூதம் கொலைத்தண்டனை அளித்துள்ளதையும் அறிய முடிகின்றது.

**சான்றெண்விளக்கம்**

[1] ஞா.தேவநேயன், பழந்தமிழாட்சி, ப.116.

[2] மேலது, ப.118.

[3] பா◌ிமேலழகர் (உ.ஆ), திருகுறள், 285.

[4] ப.சரவணன், சிலப்பதிகாரம் (பதிப்பும்உரையும்), பக்.383-384.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR